செ.வெ.எண்-33 நாள்-28.11.2020

# அரியலூர் மாவட்டம்

# நிவர் புயல் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முகாம்களில் தங்க வைக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரண உதவிகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டம், வெங்கட கிருஷ்ணாபுரம் கிராமத்தில் நிவர் புயலால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முகாம்களில் தங்க வைக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரண பொருட்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (28.11.2020) வழங்கினார்கள். அதன்படி, இந்நிகழ்வில் நிவர் புயலால் பாதிப்படைந்த நபர்களுக்கு அரிசி, சர்க்கரை, வேட்டி, சேலை உள்ளிட்ட நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

**இந்நிகழ்வில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, நிவர் புயலினை எதிர்கொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு துறைகளின் அலுவலர்களை ஒருங்கிணைத்து, முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், அரியலூர் மாவட்டத்திலுள்ள தாழ்வான பகுதிகள் மற்றும் வெள்ளத்தால் அதிகளவு பாதிக்கப்பட கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டு பொதுமக்கள் அரசு மூலம் ஏற்படுத்தப்பட்ட நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். இவ்வாறு முகாம்களில் தங்க வைக்கப்பட்ட பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி அரியலூர் மாவட்டத்தில் உட்பட்ட நான்கு வட்டங்களில் அமைக்கப்பட்ட 62 நிவாரண மையங்களில் 656 குடும்பங்களை சேர்ந்த 1065 ஆண்கள், 1359 பெண்கள், 473 குழந்தைகள் உட்பட 2897 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து தரப்பட்டது.

மேலும், மழையின் காரணமாக கால்நடைகள் பாதிக்கப்படாத வகையில் கால்நடைகளுக்கான பிரத்யோக முகாம்களும் கால்நடைப்பராமரிப்புத்துறை மூலம் அமைக்கப்பட்டது. இம்மையங்கள் மூலம் கால்நடைகளுக்கு தேவையான உலர்தீவனம், வைக்கோல் உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டு, பராமரிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் நிவர் புயலால் ஏற்பட்ட மழையின் மூலம் அதிக அளவு சேதம் தவிர்க்கப்பட்டது. மேலும், விவசாயிகளுக்கு மழை காரணமாக ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்தும் தொடர்புடைய அலுவலர்கள் மூலமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு ஏதேனும் பாதிப்பு உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவர்களுக்குரிய நிவாரண தொகை விரைவில் வழங்கப்படும். எனவே, பொதுமக்கள் அனைவரும் மழைக்காலங்களில் பரவும் நோய் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு வழிமுறைகளை முறையாக பின்பற்றி மழைக்கால நோய்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், கோட்டாட்சியர் ஜோதி, மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், ஒன்றியக்குழுத்தலைவர் செந்தமிழ்செல்வி, வட்டாட்சியர் சந்திரசேகரன், ஊராட்சி மன்ற தலைவர் வள்ளியம்மை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**